# ஒசூர் மாநகராட்சி

## மாநகர் மாமன்ற கூட்ட அறிக்கை

**2019**ஆம் ஆண்டு மே **மாதம் 31**ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் **03.00** மணிக்கு **சாதாரணக் கூட்டம்** மாநகராட்சி அலுவலகக் கட்டிடத்திலுள்ள தனி அலுவலர் அறையில் நடைபெறும். எனவே இரண்டாம் நிலை அலுவலர்கள் அனைவரும் கூட்டத்தில் தவறாது பங்கேற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தனி அலுவலர்
ஒசூர் மாநகராட்சி

==========================================================================

**<u>மாமன்றப் பொருள்</u>**

**பொருள் எண் 1**

ஒசூர் மாநகராட்சி மத்திகிரி கிராமம் சர்வே எண் 165/1, 2 பரப்பு 3.24 ஏக்கர் இடத்தில் திரு.பி.எஸ்.விஸ்வநாத ரெட்டி என்பவரால் அமைக்கப்பட உள்ள குடியிருப்பு மனைப் பிரிவிற்கு தொழிற் நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம், உறுப்பினர் செயலர் அவர்களின் ந.க.எண் 1014/2011/அ2 நாள் 28.03.2012ம் தேதிய கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் மேற்படி மனைப் பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஆகியவற்றை தானப் பத்திரம் எண் 5662/2011ன்படி முந்தைய மத்திகிரி பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்கண்ட மனைப் பிரிவில் குடிநீர் வசதி, தெரு விளக்கு, மின்கம்பங்கள் வசதி, கழிவுநீர் கால்வாய் வசதி ஆகியவை உரிய விதிகளின்படி செய்யப்பட்டுள்ளதாக பொறியாளர் அவர்களின் 14.05.2019ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். ஆகவே மனைப் பிரிவிலுள்ள சாலைகள், பூங்கா இடத்தை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளவும், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தால் தொழில் நுட்ப அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்கியதை தொடர்ந்து மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 2610/2012/எப்1

**பொருள் எண் 2**

ஒசூர் மாநகராட்சி, ஒசூர் கிராமம், சர்வே எண் 112 மற்றும் 133–ல் திருமதி நீலிமா மற்றும் திரு.ஆனந்த பாபு ஆகியோரால் அமைக்கப்படவுள்ள குடியிருப்பு மனைப் பிரிவில் பொது ஒதுக்கீடுகளான சாலைகள், பூங்கா மற்றும் மின்கம்பங்கள் அமைத்து அதனை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ள உறுப்பினர் செயலர், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமம் அவர்களின் 31.01.2019ம் தேதிய ந.க.எண் 1937/2019/ஒபுநவகு அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப் பிரிவில் சாலைகள் மற்றும் கால்வாய் கல்வெர்ட், குடிநீர் பைப்லைன் வசதி, தெருவிளக்கு மின்கம்ப வசதி செய்துள்ளதாக மாநகராட்சி பொறியாளர் அவர்களின் 20.05.2019ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார். ஆகவே மனைப் பிரிவிலுள்ள சாலைகள் மற்றும் பூங்கா இடத்தை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளவும், ஒசூர் புதுநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மனைப் பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கப்பட்ட பின்னர் மனைப் பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 3

செயலர், மாநில தேர்தல் ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 5239/2016/எம்.இ.2 நாள் 23.04.2019, அரசாணை (நிலை) எண் 40 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 28.02.2019ன்படி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி சட்ட விதிகளின் படி மாநகராட்சிக்குரிய 1) கணக்கு, 2) கல்வி , 3) பொது சுகாதாரம், 4) வரி விதிப்பு மற்றும் நிதி, 5) நகரமைப்பு மற்றும் 6) பணிகள் நிலைக்குழுக்களுக்கள் தோற்றுவிக்கப்பட வேண்டுமெனவும், தமிழ்நாடு மாநகராட்சிகள் நிலைக்குழுக்கள் தோற்றுவித்தல் சட்டம் 1997 விதி 4ன்படி மாநகராட்சிக்குள்ள பணிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினைப் பொறுத்து ஒவ்வொரு நிலைக்குழுவும் குறைந்த பட்சம் 6 முதல் அதிக பட்சமாக 15 மாமன்ற உறுப்பினர்களை நிலைக்குழுக்களில் இடம் பெற்றிருக்கலாம் எனவும் நிலைக்குழுக்களில் இடம் பெறும் மாமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை மற்றும் அதில் பெண் உறுப்பினர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் எண்ணிக்கைகளின் விபரத்தினை மாமன்றத்தில் முடிவு செய்தும், மறைமுக தேர்தல் நடத்திட ஏதுவாக அதன் விபரத்தினை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இம்மாநகராட்சி நகராட்சியாக இருந்த நிலையில் உள்ள 45 வார்டுகளை மட்டும் உள்ளடக்கி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. மேற்கண்ட 1) கணக்கு, 2) கல்வி , 3) பொது சுகாதாரம், 4) வரி விதிப்பு மற்றும் நிதி, 5) நகரமைப்பு மற்றும் 6) பணிகள் என்ற ஆறு நிலைக்குழுக்கான மாமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையினை பின்வருமாறு நிர்ணயம் செய்வது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிலைக்குழு விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | கணக்கு | 3 | 3 | 6 |
| 2 | கல்வி | 3 | 3 | 6 |
| 3 | பொது சுகாதாரம் | 3 | 3 | 6 |
| 4 | வரி விதிப்பு மற்றும் நிதி | 3 | 3 | 6 |
| 5 | நகரமைப்பு | 3 | 3 | 6 |
| 6 | பணிகள் | 3 | 3 | 6 |
| **மொத்தம்** | | **18** | **18** | **36** |

அலுவலகக் குறிப்பு

1) இம்மாமன்றம் 1) கணக்கு, 2) கல்வி , 3) பொது சுகாதாரம், 4) வரி விதிப்பு மற்றும் நிதி, 5) நகரமைப்பு மற்றும் 6) பணிகள் என்ற ஆறு நிலைக்குழு தலா 6 மாமன்ற உறுப்பினர்கள் இடம் பெறவும், அவ்வுறுப்பினர்களில் 50 சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கீடு செய்திடவும், மேலும் மேற்கண்ட ஒவ்வொரு நிலைக்குழுக்களிலும் தேர்ந்தெடுக்கப்படும் மாமன்ற உறுப்பினர்களில் அவர்களுக்குள் ஒருவரை மேற்படி நிலைக்குழுவின் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

2) மேலும், நியமனக்குழு தவிர்த்து மேற்கண்டவாறு இம்மாநகராட்சியின் 6 நிலைக்குழுக்களுக்கும் 36 உறுப்பினர்களை எண்ணிக்கையாக (Strength Fixation) நிர்ணயம் செய்திட அரசின் அனுமதியினை பெறவும், மேற்கண்ட எண்ணிக்கையினை மாநில தேர்தல் ஆணையத்திற்கு தெரிவித்து மறைமுக தேர்தல் நடத்திடவும் மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண்.4408/2019/சி2)

பொருள் எண் 4

நகராட்சிகளின் நிர்வாக மண்டல செயற்பொறியாளர் சேலம் அவர்களின் தொலைபேசி செய்தியில் தெரிவித்துள்ளவாறு இம்மாநகராட்சிக்கு வறட்சி நிவாரண நிதி 2019–20ன் கீழ் மாநகராட்சிக்குட்பட்ட கீழ்காணும் பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்துதல், பகிர்மான குழாய்கள் அமைத்தல் மற்றும் 7.5 HP, 10HP மின்மோட்டர்கள், பேனல்போர்டுகள் சப்ளை செய்து பொருத்துதல் பணிகளுக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மற்றும் விரிவான திட்ட அறிக்கையினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களின் மூலம் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 1 ஜூஜூவாடி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 2 | வார்டு எண். 2 ஜூஜூவாடி ஏரியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 3 | வார்டு எண்.4 சின்ன எலசகிரி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 4 | வார்டு எண்.5 பாலாஜி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 5 | வார்டு எண்.6 ஆவலப்பள்ளி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 6 | வார்டு எண்.7 திம்மச்சந்திரம் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 7 | வார்டு எண்.8 பஸ்தி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 8 | வார்டு எண்.9 ஆவலப்பள்ளி ஹட்கோ பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 9 | வார்டு எண்.10 வெங்கடேஷ் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 10 | வார்டு எண்.12 குறிஞ்சி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 11 | வார்டு எண்.13 பூஞ்சோலை நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 12 | வார்டு எண்.15 காந்தி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 13 | வார்டு எண். 15 பொதிகை நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 14 | வார்டு எண். 17 மத்தம் அக்ரஹாரம் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 15 | வார்டு எண். 25 நரசம்மா காலனி பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 16 | வார்டு எண். 25 திருவள்ளுவர் நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 17 | வார்டு எண். 38 கொம்பேரி குட்டை பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 18 | வார்டு எண்.39 வெங்கடேஷ்வரா லேஅவுட் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |

| | | |
|---|---|---|
| 19 | பேரண்டப்பள்ளி தலைமை நீரேற்றும் நிலையம் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 20 | பேரண்டப்பள்ளி தலைமை நீரேற்றும் நிலையம் அருகிலுள்ள சிவசக்தி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 21 | 10 HP மின்மோட்டார்கள் மற்றும் பேனல்போர்டுகள் சப்ளை செய்து பொருத்துதல் | 10.00 |
| 22 | 7.5 HP மின்மோட்டார்கள் மற்றும் பேனல்போர்டுகள் சப்ளை செய்து பொருத்துதல் | 8.00 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி செலவீனத்தை குடிநீர் நிதியில் வழங்கவும் வறட்சி நிவாரண நிதி கிடைக்க பெற்றவுடன் குடிநீர் நிதியினை ஈடு செய்து கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 5**

இம்மாநகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 28 ல் தேர்பேட்டை ஏரியில் கழிவுநீர் கலப்பதை தடுக்க அனைத்து பகுதிகளிலிருந்து வரும் கழிவுநீரினை குழாய்கள் மூலம் இணைத்து ஏரியில் கலக்காமல் வெளியே கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கழிவுநீர் குழாய்களை கொண்டு செல்லும் தேர்பேட்டை பிரதான சாலையில் பழுதடைந்த பாலம் உள்ளது. இச்சாலையில் உள்ள பழுதடைந்த பாலத்தை அகற்றி புதியதாக பாலம் கட்ட வேண்டும். எனவே மேற்படி பகுதியில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் நேராய்வு மேற்கொண்டு உடனடியாக புதிய பாலம் கட்டவும், கழிவுநீர் குழாய்கள் மற்றும் சேம்பர் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.15.00 இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 6**

இம்மாநகராட்சியின் அலுவலகத்தில் உள்ள 25 KVA ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளது. மேலும் இதனை வாங்கி 7 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால் ஜெனரேட்டரில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது பார்த்தல் (Service) மற்றும் தேவையான புதிய உபகரணங்களை (Parts) மாற்றுதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. மேலும் மின்சாரம் தடைப்படும் நேரங்களில் அலுவலக பணிகள், வரிவசூல் மற்றும் கணினி பயன்பாடுகள் பாதிக்காத வண்ணம் ஜெனரேட்டர் இயக்குவது மிகவும் முக்கியமானதாக உள்ளது. எனவே ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் ஜெனரேட்டரில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி பழுது பார்க்கும் பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ.80000 ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 7**

ஒசூர் மாநகராட்சியின் மொத்த பரப்பளவு 72.41 ச.கி.மீட்டர் ஆகும். 2011 ல் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி மொத்த மக்கள் தொகை 245355. இம்மாநகராட்சியின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 3.00 இலட்சமாக உள்ளது. இதனால் மநாகராட்சிக்கு தற்போது தேவைப்படும் குடிநீரின் அளவு 27 MLD. ஆனால் நமக்கு கிடைப்பது 18 MLD மட்டுமே. எனவே இம்மாநகராட்சியில் நிலவும் குடிநீர் தட்டுபாட்டை தவிர்க்கவும் குடிநீரினை சிக்கனமாக பயன்படுத்தவும் வேறு வழிகளை கையாள வேண்டியுள்ளதால், இதன் ஒரு கட்டமாக கழிவு நீரினை மறு சுழற்சி முறையில் பயன்படுத்தி கழிப்பிடம், பூங்காக்கள் போன்ற இடங்களுக்கு பயன்படுத்தும் விதமாக மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி அவர்கள் Ozone Technology யை பயன்படுத்த 24.04.2019 அன்று அறிவுறுத்தியுள்ளார். அதன் அடிப்படையில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் அலோசனை செய்து இம்மாநகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் கிழக்கு புறம் உள்ள கழிவறையின் செப்டிக் டேங்க் கழிவு நீரினை Ozone Technology யை பயன்படுத்தி 5000 முதல் 10000 லிட்டர் வரை மறு சுழற்சி முறையில் மீண்டும் இக்கழிவறைக்கு பயன்படுத்தலாம் என முடிவெடுத்து நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி இக்கழிவு நீர் சுத்திகரிப்பு இயந்திரம் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சங்கள் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 8**

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 1 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்கள் மற்றும் நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் மற்றும் கூடுதலாக GI குழாய்கள் இறக்குதல் ஆகிய பணிகளுக்காக மின்மோட்டார்களை வெளியே எடுத்தல் மற்றும் மீண்டும் பொருத்துதல் (Motor Lifting and Errection) போன்ற பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விலை அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்க ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தபபட்டது. மேலும் குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 9

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 16 முதல் 30 வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்கள் மற்றும் நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் மற்றும் கூடுதலாக GI குழாய்கள் இறக்குதல் ஆகிய பணிகளுக்காக மின்மோட்டார்களை வெளியே எடுத்தல் மற்றும் மீண்டும் பொருத்துதல் (Motor Lifting and Errection) போன்ற பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விலை அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்க ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தபபட்டது. மேலும் குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 10

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 31 முதல் 45 வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகளின் மின்மோட்டார்கள் மற்றும் நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகளை பழுது நீக்கம் செய்தல் மற்றும் கூடுதலாக GI குழாய்கள் இறக்குதல் ஆகிய பணிகளுக்காக மின்மோட்டார்களை வெளியே எடுத்தல் மற்றும் மீண்டும் பொருத்துதல் (Motor Lifting and Errection) போன்ற பணிகளை மேற்கொள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் விலை அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்க ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தபபட்டது. மேலும் குடிநீர் விநியோகத்தின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டபப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 11

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் 1 முதல் 15 வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் நீரேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் பேனல்போர்டுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்தல் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவர் கிருஷ்ணகிரி அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.730/2009/அ4 நாள் 08.02.2010ல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/S Jayam Electricals, ஒசூர் அவர்களின் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்க ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.9.00 இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 12**

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் **16** முதல் **30** வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் நீறேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் பேனல்போர்டுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்தல் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சி தலைவர் கிருஷ்ணகிரி அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**730/2009/**அ**4** நாள் **08.02.2010** ல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/S.Rohini Electricals, ஓசூர் அவர்களின் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்க ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.00** இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 13**

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள் **31** முதல் **45** வரையுள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறுகள் மற்றும் நீறேற்றும் நிலையங்களில் உள்ள மின்மோட்டார்கள் மற்றும் பேனல்போர்டுகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்தல் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் கிருஷ்ணகிரி அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.**730/2009/**அ**4** நாள் **08.02.2010** ல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s.JSR Electricals, ஓசூர் அவர்களின் மூலம் மேற்படி பணிகளை மேற்கொள்ள மதிப்பீடுத் தயாரிக்க ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.**9.00** இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 14**

ஓசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் **480** ஆழ்துளை கிணறுகள் மூலம் மொத்தம் **18** MLD 73 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வவகிறது. மேலும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் மூலம் மாநகராட்சிக்கு விநியோகிக்கப்படும் குடிநீரின் அளவினை கணக்கிட அளவு மானி (Flow Meter) கொள்முதல் செய்து பொருத்த அறிவுறுத்தப்பட்டது. எனவே வார்டு எண்கள் **1** முதல் **45** வரையுள்ள குடிநீர் விநியோகம் பகுதிகளுக்கு அளவு மானி (Flow Meter) அமைக்க மதிப்பீடுத் தயாரிக்க ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ **3.00** இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 15**

ஒசூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட விரிவாக்கப்பட்ட வார்டுகளில் குழாய் நீட்டிப்பு செய்யவும் மற்றும் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாத தெருக்களுக்கு புதியதாக குழாய்கள் அமைக்கவும் மேலும் கீழ்கண்ட வார்டு பகுதிகளான வார்டு எண். 13 முனிஸ்வர் நகர், வார்டு எண்.42 கர்னூர் மற்றும் வார்டு எண்.45 மத்திகிரி ஆகிய பகுதிகளில் குடிநீர் இணைப்புகள் வழங்கவும் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனவே மேற்காணும் வார்டு பகுதிகளில் நேராய்வு மேற்கொண்டு ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்கள் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ 6.00 இலட்சம் ஆகும். எனவே மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 16**

செயற்பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திட்டப்பிரிவு கிருஷ்ணகிரி அவர்களின் கடிதத்தில் அம்ருத் திட்டம் 2015–16 குடிநீர் அபிவிருத்தி திட்டப் பணிகளுக்கான நிர்வாக அனுமதி ரூ.87.91 கோடியாகும், இதற்கான தெழில்நுட்ப அனுமதி ரூ.92.21 கோடியாகும். அரசாணையில் குறிப்பிட்டுள்ளதின் படி கூடுதல் செலவீன தொகையினை நகராட்சி மூலம் ஈடு செய்யவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ் 4 சமநிலை மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளும், 8 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளும் கட்டப்பட்டு வருகிறது. மேலும் இத்திட்டத்தில் 57.048 பிராதான குழாய்களும் 145.047 பகிர்மா குழாய்கள் அமைக்கும் பணிகள் தற்போது நடைப்பெற்று வருகிறது. இத்திட்டம் வரும் ஜூலை 2019 க்குள் முழுமையாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் இத்திட்ட மதிப்பீட்டில் Trenchless Technology for Railway and NHAI Crossing பணிகளுக்காக ரூ. 2.25 இலட்சங்கள் மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் Trenchless Technology for Railway and NHAI Crossing பணிகளுக்கு மொத்தமாக ரூ. 107.13 இலட்சங்கள் செலவாகும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கிருஷ்ணகிரி அவர்களின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே கூடுதல் செலவீன தொகை ரூ. 104.88 இலட்சங்களை மேற்படி திட்டத்தின் வாயிலாகவோ அல்லது நகராட்சி பொது நிதியிலோ மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 17**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் 480 ஆழ்துளை கிணறுகள் மூலம் மொத்தம் 18 MLD, 73 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பேரண்டப்பள்ளி தலைமை நீரேற்றும் நிலையத்திலிருந்து காமராஜ் காலனியில் உள்ள 10 லட்சம் கொள்ளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிக்கு அளவு மானி (Flow Meter) பொருத்த அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி அளவுமானி (Flow Meter) கொள்முதல் செய்து பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ 7.00 இலட்சம் ஆகும். எனவே மேற்படி பணிக்கும் மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 18**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் 480 ஆழ்துளை கிணறுகள் மூலம் மொத்தம் 18 MLD, 73 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தில் ஒசூர் மாநகராட்சிக்கு குடிநீர் விநியோகம் செய்யும் அளவினைகணக்கிட ஏதுவாக அளவு மானி (Flow Meter) பொருத்த அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி அளவுமானி (Flow Meter) கொள்முதல் செய்து பொருத்த தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ 9.00 இலட்சம் ஆகும். எனவே மேற்படி பணிக்கும் மதிப்பீட்டு தொகைக்கும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 19**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் 480 ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்பொழுது 25க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறுகளில் நீர் வரத்து முற்றிலும் வற்றியுள்ளது மற்றும் சுமார் 50க்கும் மேற்ப்பட்ட ஆழ்துளை கிணறுகளில் நீர் வரத்து குறைந்து வருகிறது. எனவே வார்டு எண்.37 சிவசக்தி நகர் மற்றும் வார்டு எண்.31 கோகுல் நகர் பகுதி மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேற்படி பகுதியிலுள்ள ஆழ்துளை கிணறுகளில் புதிதாக மின்மோட்டார்கள், GI பைப்புகள் மற்றும் கேபிள்களை பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ. 8.50 ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 20**

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32 Childrens Parks ல் உள்ள ஆழ்துளை கிணற்றலிருந்து தளி ரோட்டில் உள்ள R.O.க்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் Childrens Parks ல் உள்ள ஆழ்துளை கிணற்றின் மின்மோட்டார்கள், பைப்புகள் மற்றும் கேபிள் ஆகியவைகள் பழுதடைந்துள்ளதுள்ளதால் R.O.க்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேற்படி பகுதியில் உள்ள ஆழ்துளை கிணற்றிற்கு புதிதாக மின்மோட்டார்கள், 2" GI பைப்புகள் மற்றும் கேபிள்கள் அமைத்து R.O.க்கு குடிநீர் விநியோகம் செய்ய ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 3.75 ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 21**

ஒசூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டம் மற்றும் 480 ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் தற்பொழுது 25க்கும் மேற்பட்ட ஆழ்துளை கிணறுகளில் நீர் வரத்து முற்றிலும் வற்றியுள்ளதாலும், சுமார் 50க்கும் மேற்ப்பட்ட ஆழ்துளை கிணறுகளில் நீர் வரத்து குறைந்துள்ளதுள்ளதால் அப்பகுதி பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே குடிநீர் தட்டுப்பாட்டை தவிர்க்கவும், பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யவும் புதியதாக ஆழ்துளை கிணறுகள் அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள பணிகளுக்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1 | வார்டு எண். 25 சீதாராம் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 2 | வார்டு எண். 45 குருப்பட்டி பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 3 | வார்டு எண். 39 நேரு நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 4 | தசேப்பள்ளி உரக்கிடங்கு பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |
| 5 | வார்டு எண். 31 கோகுல் நகர் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | 7.00 |

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண் 22**

ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வண்டி வாகன எண் TN 29 W 1923 வாகனத்திற்கு 2019 –20 ம் ஆண்டிற்கு தகுதி சான்று பெறவும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ளவும் தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ. 2.35 இலட்சங்கள் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 23

ஒசூர் சிறப்பு நிலை நகராட்சியினை மாநகராட்சியாக தரம் உயர்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு உள்ளாட்சி துறை அமைச்சர் அவர்களுக்கும் ஒசூர் நகராட்சியின் சார்பாகவும் மற்றும் பொதுமக்களின் சார்பாகவும் நன்றியினை தெரிவித்து மாலை மலர் நாழிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பர செலவினம் ரூ. 28000.00ஐ Malar Publication Private Ltd, அவர்களுக்கு வழங்கவும் செலவினத் தொகையினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 24

இந்நகராட்சியில் குடிநீர் விநியோக பணிகள் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் நீர்கசிவுகளை உடனுக்குடன் சரி செய்தல் பணிக்காக 20 பணியாளர்களுக்கு மெஸர்ஸ் H.M.நண்பர்கள சுய உதவிக் குழு, ஒசூர் அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இந்நகர்மன்ற தீர்மானம் எண் 224 நாள்.16.09.2015ன் மூலம் அனுமதிக்கப்பட்டு, 89 நாட்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி பணி உத்திரவின்படி 89 நாட்களுக்கு ஒருமுறை கால நீட்டிப்பு செய்யப்பட்டு வருகிறது. தற்போது 12.05.2019 உடன் மேற்படி கால நீட்டிப்பு முடிவடைவதால், 13.05.2019 முதல் 09.08.2019 வரை 89 நாட்கள் அனுமதி வழங்கவும் பணியின் அவசர அவசியம் கருதியும், பணியாளர்களின் பற்றாக்குறையினாலும், பொதுமக்களின் நலன் கருதியும் சுகாதாரப் பிரிவு குழுவிலிருந்து மேற்படி பணிக்காக பணி செய்யும் குழுவினை பணியமர்த்தவும் சேர்த்து 30 பணியாளர்களுக்கு மேற்படி பணிகளை செய்ய மெஸர்ஸ் H.M நண்பர்கள் சுய உதவிக் குழு ஒசூர் அவர்களுக்கு 89 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்யவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.5,34,000/—ஐ குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் மற்றும் ஆணையாளரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 25

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13 முனீஸ்வர் நகர் மற்றும் சிவக்குமார் நகர் பகுதியில் உள்ள கழிவுநீர் கால்வாய்கள், சிறுபாலங்கள் ஆங்காங்கே சரிந்தும் பழுதுகள் ஏற்பட்டு உடைந்தும் உள்ளது. இதனால் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் சரியான முறையில் வெளியேறாமல் சாலையில் தேங்கி சுகாதார சீர்கேடு உருவாவதாகவும் பொது மக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே மேற்படி பகுதிகளில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் நேரில் ஆய்வு மேற்கொண்டு மேற்காணும் பகுதிகளில் பழுதடைந்த கழிவுநீர் கால்வாய்கள் மற்றும் சிறுபாலங்களை சீரமைத்து தருமாறு அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ. 9.00 இலட்சங்கள் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 26

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 15 வரை உள்ள வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் நீர்கசிவுகளை சரி செய்தல் பணிகளை மேற்கொள்ள குடிநீர் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாததால் மேற்காணும் வார்டு எண்1 முதல் 15 வரையுள்ள பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேற்காணும் பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும் போர்கால அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக 20 குடிநீர் பணியாளர்களை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளியோ அல்லது சுய உதவி குழுக்களின் மூலம் 89 நாட்களுக்கு மட்டும் பணி அமர்த்தி கொள்ளவும் செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் 20 பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் பணிகளை மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியோ அல்லது சுய உதவி குழுக்கள் மூலமோ பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 27

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16 முதல் 30 வரை உள்ள வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் நீர்கசிவுகளை சரி செய்தல் பணிகளை மேற்கொள்ள குடிநீர் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாததால் மேற்காணும் வார்டு எண்16 முதல் 30 வரையுள்ள பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேற்காணும் பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும் போர்கால அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக 20 குடிநீர் பணியாளர்களை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளியோ அல்லது சுய உதவி குழுக்களின் மூலம் 89 நாட்களுக்கு மட்டும் பணி அமர்த்தி கொள்ளவும் செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் 20 பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் பணிகளை மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியோ அல்லது சுய உதவி குழுக்கள் மூலமோ பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 28

இம்மாநகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 31 முதல் 45 வரை உள்ள வார்டு பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யவும் மற்றும் குடிநீர் குழாய்களில் ஏற்படும் நீர்கசிவுகளை சரி செய்தல் பணிகளை மேற்கொள்ள குடிநீர் பணியாளர்கள் போதுமான அளவில் இல்லாததால் மேற்காணும் வார்டு எண்31 முதல் 45 வரையுள்ள பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே மேற்காணும் பகுதிகளில் உள்ள பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யும் பொருட்டும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும் போர்கால அடிப்படையில் முற்றிலும் தற்காலிகமாக 20 குடிநீர் பணியாளர்களை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளியோ அல்லது சுய உதவி குழுக்களின் மூலம் 89 நாட்களுக்கு மட்டும் பணி அமர்த்தி கொள்ளவும் செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் 20 பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் கிருஷ்ணகிரி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் பணிகளை மேற்கொள்ளவும், செலவினத் தொகையினை குடிநீர் நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்காணும் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளியோ அல்லது சுய உதவி குழுக்கள் மூலமோ பணிகளை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 29

ஒசூர் மாநகராட்சிக்குட்பட்ட சூடவாடி மாநகராட்சி துவக்கப்பள்ளியில் அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் செய்து தர கோரி அப்பள்ளி தலைமையாசிரியர் மனு அளித்துள்ளார். மேற்படி மனுவில் பள்ளியில் மாணவர்கள் உணவருந்தும் இடத்திற்கு மேற்கூரை அமைத்து தரவும், இறைவணக்கம் கூட்டம் நடத்த மேடை, கழிவறைகளில் பழுதுகள் நீக்கம் மற்றும் பள்ளி கட்டிடத்திற்கு வர்ணம் பூசுதல் போன்ற பணிகளை செய்து தரக்கோரியுள்ளார். அவர் கோரியுள்ளத்தின் பேரில் இப்பள்ளியில் ஆணையாளர் மற்றும் பொறியாளர் அவர்கள் நேராய்வு மேற்கொண்டு மேற்படி பள்ளிக்கு தேவையான அத்தியாவசிய பணிகளை உடனடியாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடுத் தொகை ரூ. 9.90 இலட்சங்கள் ஆகும். எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும் செலவீனத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவீனத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண் 30

மீன்வள இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் எண். BR/2019-2020/Tamilnadu/765 நாள்.25.06.2019 கடிதத்தின்படி ஒசூர் மாநகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர் மார்கெட்டில் புதிய நவீன மீன் விற்பனை அங்காடி மையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரித்து வழங்க தெரிவிக்கப்பட்டது. இதற்கான பங்கு தொகைகளை தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 40 சதவீதமும், மீன்வள துறையின் மூலம் 50 சதவீதமும், மீதமுள்ள 10 சதவீத பங்கு தொகையினை மாநகராட்சி மூலம் ஈடு செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே அதன்படி ரூ.150.00 இலட்சங்கள் மதிப்பீட்டில் மாநகராட்சிக்கு சொந்தமான எம்.ஜி.ஆர் மார்கெட்டில் நவீன மீன் விற்பனை அங்காடி மையம் அமைக்க விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டது. எனவே மேற்படி மதிப்பீட்டு தொகைக்கும், முன்மொழிவுகளை உதவி இயக்குநர் அவர்களுக்கு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

தனி அலுவலர்
ஒசூர் மாநகராட்சி

2019ஆம் ஆண்டு மே மாதம் 31ம் தேதி வெள்ளிக் கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் நடவடிக்கைகள்

தலைமை – திரு.கே.பாலசுப்பிரமணியன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர், ஒசூர் நகராட்சி

| பொருள் எண் | தீர்மான எண் | கூட்ட நடவடிக்கை |
|---|---|---|
| 1 | 274 | அனுமதிக்கப்பட்டது |
| 2 | 275 | அனுமதிக்கப்பட்டது |
| 3 | 276 | அனுமதிக்கப்பட்டது |
| 4 | 277 | அனுமதிக்கப்பட்டது |
| 5 | 278 | அனுமதிக்கப்பட்டது |
| 6 | 279 | அனுமதிக்கப்பட்டது |
| 7 | 280 | அனுமதிக்கப்பட்டது |
| 8 | 281 | அனுமதிக்கப்பட்டது |
| 9 | 282 | அனுமதிக்கப்பட்டது |
| 10 | 283 | அனுமதிக்கப்பட்டது |
| 11 | 284 | அனுமதிக்கப்பட்டது |
| 12 | 285 | அனுமதிக்கப்பட்டது |
| 13 | 286 | அனுமதிக்கப்பட்டது |
| 14 | 287 | அனுமதிக்கப்பட்டது |
| 15 | 288 | அனுமதிக்கப்பட்டது |
| 16 | 289 | அனுமதிக்கப்பட்டது |
| 17 | 290 | அனுமதிக்கப்பட்டது |
| 18 | 291 | அனுமதிக்கப்பட்டது |
| 19 | 292 | அனுமதிக்கப்பட்டது |
| 20 | 293 | அனுமதிக்கப்பட்டது |
| 21 | 294 | அனுமதிக்கப்பட்டது |
| 22 | 295 | அனுமதிக்கப்பட்டது |
| 23 | 296 | அனுமதிக்கப்பட்டது |
| 24 | 297 | அனுமதிக்கப்பட்டது |
| 25 | 298 | அனுமதிக்கப்பட்டது |
| 26 | 299 | அனுமதிக்கப்பட்டது |
| 27 | 300 | அனுமதிக்கப்பட்டது |
| 28 | 301 | அனுமதிக்கப்பட்டது |
| 29 | 302 | அனுமதிக்கப்பட்டது |
| 30 | 303 | அனுமதிக்கப்பட்டது |

(ஒம்) கே.பாலசுப்பிரமணியன்
தனி அலுவலர்
ஒசூர் மாநகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
ஒசூர் மாநகராட்சி